உ

# முன்னீசுவரம்



குல.சபாநாதன்

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
சிலாபம், இலங்கை.

உ

சிவமயம்

# முன்னீசுவரம்

ஆசிரியர்:

குல. சபாநாதன்

பதிப்பாசிரியர்:

பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்

B.A.(Hons.), P.G.Dip.in Edu., M.Phil.

விரிவுரையாளர்

சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(மீள்பதிப்பு)

வெளியீடு

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்

முன்னேஸ்வரம்

சிலாபம்.

2014




* குல. சபாநாதன் *

## பிரயாணம்

"நவராத்திரி பூசை இங்கே மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. நீங்கள் ஒருமுறை வந்து பார்த்தால்தான் நான் கூறுவதன் உண்மையினை உணர்வீர்கள். இம்முறை கட்டாயம் வரவேண்டும்" என்று வற்புறுத்திக் கட்டளையிட்டிருந்தார் எம் நண்பர் ஒருவர். கோயிலைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பம் பல வருஷங்களாக இருந்ததெனினும், அவ்வூரிலுள்ள காட்டுச்சுரத்தை நினைந்தபோது முன்னிருந்த விருப்பம் இருந்த இடமும் தெரியாமல் கெட்டுவிடுவது வழக்கம். ஒருமுறை துணிவுடன் நானும் சில நண்பர்களும் கொழும்பிலிருந்து ரெயில் மார்க்கமாகப் புறப்பட்டோம். பஸ் வண்டியில் பிரயாணம் செய்தால் கோயிலுக்கருகிற்போய் இறங்கலாம். ஆனால் எங்கள் நண்பர்களில் சிலர் பஸ்வண்டிப் பிரயாணத்தை அதிகம் விரும்பாமையால் ரெயில்வண்டி மார்க்கமாகவே பிரயாணம் செய்தோம். முன்னர்க் குறிப்பிட்ட நண்பர் எங்களை எதிர்பார்த்தவண்ணம் சலாபம் (Chilaw) ரெயில்வே நிலயத்தில் நின்றார். அவ்விடத்தில் இறங்கினவுடன் கடற்கரையருகில் மிகவும் அழகு வாய்ந்த அவருடைய இல்லத்திற்குக் கூட்டிச் சென்றார். அவருடைய வீட்டிலிருந்து கோயில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது.

## கடற்கரை

சாயங்காலப் பூஜைக்குப் போகலாமென ஒழுங்கு செய்துகொண்டு கடற்கரையோரமாகச் சிறிது தூரம் உலாவச் சென்றோம். சென்ற பொழுது நெய்தல்நில மக்களின் குடிசைகள் தென்பட்டன.

"பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாட"

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் எத்தனையோ ஆண்டுகட்கு முன்னர்ப் பிடித்த படம் இப்பொழுதும் அழியாதிருத்தல் கண்டு மகிழ்ந்தோம். உறைக் கிணற்றில் தண்ணீர் மொள்ளவந்த பெதும்பைப் பருவப் பாத்தியர்கள் சிங்களவர்களைப்போலச் சேலை கட்டியிருந்தார்களெனினும்

தமிழ்ப்பாஷையிலே அளவளாவுதலைக் கேட்டபொழுது எமது மகிழ்ச்சி வியப்போடு கூடியதாயிற்று. அவர்கட்கு அருகிற் சென்று அவர்களுடைய பெயர்களைக் கேட்டபொழுது சிங்களப் பெயர்களையே சொன்னார்கள். அவர்களுடைய தாய்ப்பாஷை தமிழாகவே இப்பொழுது இருப்பினும் இன்னும் சில காலத்துக்குள் முற்றும் சிங்களமயமாக மாறிவிடக்கூடும் எனக் கருதற்கு இடம் ஏற்பட்டு வருகின்றது. அவர்களுடைய வரலாற்றைக் கூறப் புகின் மற்றொன்று விரித்தலாய் முடியும். எனினும் பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் இலங்கையின் பல வேறு திசைகளிலும் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு இஃது ஒரு தகுந்த எடுத்துக்காட்டாகும். எனவே இவ்வளவு தூரத்தில் தமிழர்கள் கட்டி வழிபட்ட புராதனமான கோவிலொன்று இருத்தலில் ஆச்சரியம் ஒன்றுளதோ?

## கோவில்

சாயங்காலமானதும் நாங்கள் வந்த முக்கிய நோக்கத்திற் கவனம் செலுத்தினோம். தென்னிந்தியக் கோவில்களைப்போலப் பருத்த கட்டிடம் ஒன்றும் இல்லை. மிகவும் பழையதொரு கோவில் என்ற எண்ணமும் காட்சியும் கட்டிடத்தைப்பற்றிய எண்ணத்தைத் தலையெடுக்கவிடாது அமுக்கிவிட்டன. ஜனங்கள் தங்குவதற்கேற்ற சில மண்டபங்களுள. சிறு கடைகளும் உண்டு.

## உள்ளே

உள்ளே சென்றவுடன் வடிவாம்பிகை கொலுவிருக்கும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு ஆனந்தித்தோம். அத்திருவுருவம், கண்டவர் மனத்தைக் கவர்ந்து ஓர் உள்ளக் களிப்பையும் பக்தியையும் உண்டுபண்ணும் வசீகர சக்தி ததும்பி வழியும் தன்மை வாய்க்கப்பெற்றது. நடராஜர் திருவுருவம் பலவிடங்களில் இருப்பினும் சிதம்பர தலத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமான் திருவுருவம் எங்ஙனம் சிற்பமுறையிற் சிறப்பாக அமைந்துளதோ, அங்ஙனமே இலங்கையிலும் அம்பிகையின் திருவுருவம் திருவருளால் சிறப்பாக அமைந்துள்ளதெனச் சிற்பசாஸ்திரக் கலைவல்லார் கூறக் கேட்டுள்ளோம். இத் திருவுருவத்தைக் கண்ட புலவர்கள் பலர் பாமாலைகளைச் சூட்டி உளமுருகி அசைவற்று நின்ற காட்சியை எம்மால் எடுத்துக் கூறமுடியாது.

## குருக்கள் ஐயா

இக்கோயிலை நடத்திவரும் பிரும்மஸ்ரீ மு. சோமாஸ்கந்த குருக்கள் அவர்களும் சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரு பாஷைகளிலும் அதிகப் பாண்டித்திய முடையவர். இக்கோயிலைப்பற்றிய சரித்திர சம்பந்தமான ஏடுகளைச் சேகரித்து தேவஸ்தானத்திலேயே வைத்திருக்கின்றனர். குருக்கள் அவர்கள் உடல்நலங் குறைந்திருப்பினும் நவராத்திரி விழாக்காலங்களில் தாமாகவே வந்து நின்று அம்பிகைக்குப் பூஜை செய்துவருவதில் தவறக் கூடாதென்னும் விரதமுடையவர். உச்சிக்காலப் பூஜை காணச் செல்பவர்களெல்லாரும் அங்கே தங்கி நின்று திருவமுதுண்டு செல்லவேண்டுமென்ற

ஒழுங்கினைச் செய்திருக்கின்றார். காந்தியடிகள் சைவக் கோயில்களைப் பற்றிப் பிரசாரம் செய்யத் தொடங்குவதற்குப் பல ஆண்டுகட்கு முன்பே சைவர்களுட் சிலர் உட்செல்வதைத் தடை செய்யாதிருந்ததோடு சிங்களவர்களையும் வந்து வணங்கும்படி குருக்கள் அவர்கள் உத்தரவு கொடுத்திருந்தார்கள். இதனால் இக்கோயில் சிங்களவர் தமிழர் என்ற வேற்றுமை கடந்து யாவர்க்கும் பொதுவான பெருந்தன்மையைக் காட்டும் ஒன்றாக விளங்கி நிற்கின்றது.

## புராணக்கதைகள்

முன்னேசுவரம், இராமேசுவரம், திருக்கேதீசுவரம், நகுலேசுவரம் என்னும் பஞ்சேசுவரங்களுள் முன்னர்த் தோன்றிய கோயில் முன்னேசுவரமே யென்பது சரித்திராசிரியர்களுக்குச் சம்மதமே. இக் கோயிலின் பெயர் முன்னேசுவரம், முன்னீசுவரம், முனீசுவரம் எனப் பலவாறாக வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு பெயருக்கும் புராணக் கதைகள் புனைவதில் தமிழ்ப் புலவர்கள் உயர்ந்த படியிலுள்ளவர்கள் என்பது யாவரும் நன்கறிந்த விஷயம். இப்பொழுது பெயர் தெரிந்துகொள்ள முடியாதிருக்கும் முனிவர் ஒருவர் வழிபட்ட ஈசுவரம் எனப் பொருள் கொள்ளல் அவ்வளவு பிழையன்று. இடப்பெயராராய்ச்சி எளிதில் முற்றுப்பெறும் விஷயமுமன்று.

## திரேதாயுகம்

இக்கோயிலைப்பற்றிய புராண கதைகள் பலவுள. கலியுகத்தில் ஆரம்பிக்காமல் திரேதாயுகம் தொடக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். திரேதாயுகத்தில் ஸ்ரீராமபிரான் இலங்கைக்கு வந்து இராவண சங்காரஞ் செய்தபின், சீதாதேவியாதியாரோடு புட்பக விமானத்திலேறி ஆகாய மார்க்கமாகப் போகும்பொழுது கரிய நிறமும் சாயா ரூபமுமுடைய பிரம்மஹத்தியானது அவரைப் பின்தொடர்ந்ததாம். ஸ்ரீ முன்னேசுவர க்ஷேத்திரத்தைச் சமீபித்தவுடன் அது தம்மை விட்டு அகன்றமைகண்டு, அவர் பரிவாரங்களோடு பூமியில் இறங்கி முன்னநாதேசுவரரையும் வடிவாம்பிகையையும் மனம் வாக்குக் காயங்களால் தொழுதனர். அப்பொழுது சிவபெருமான் வடிவாம்பிகையோடு இடபாரூடராய்க் காட்சியளித்து, அந்தப் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும் பொருட்டு முன்னேசுவரம், கேதீசுவரம், கோணேசுவரம் என்னும் மூன்று தலங்களிலும், பின் சேதுக்கரையிலும் சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணுமாறு பணித்தனர். அங்ஙனமே ஸ்ரீராமபிரான் முன்னேசுவர க்ஷேத்திரத்திற்கு வடதிசையில் விளங்கும் மாயவனாற்றுக்கு வட பாகத்தில் மானாவரி என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் ராமலிங்கம் என்னும் பெயரோடு சுவர்ணலிங்கத்தையும், திருக்கோணாசலத்தில் வெளப்பியலிங்கத்தையும், கேதீசுவரத்தில் இரத்தின லிங்கத்தையும், சேதுக்கரையில் சைகதலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து, பிரம்மஹத்தி நீங்கப்பெற்று அயோத்தியை அடைந்தார். இவ்வாறு தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது. பிரம்மஹத்தி நீங்கியது இராமேசுவரத்திலென்பது செகராசசேகரமாலைச் சிறப்புப் பாயிரச் செய்யுட்களாலும் அறியக்கிடக்கின்றது. இராமபிரான் இராவண

னுடன் யுத்தந் தொடங்குமுன்னர் முன்னேசுவரத்தில் தொழுது சென்றனர் என ஸர் பி. அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.*

## துவாபரயுகம்

இனி அடுத்த யுகத்தைக் கவனிப்போம். துவாபர யுகத்தில் தவச் சிரேட்டர்களாய் விளங்கிய முனிவர்கள் இமயமலைச்சாரலில் ஒரு சிறந்த யாகத்தைச் செய்த காலத்தில் வியாச முனிவர் ஆண்டு எழுந்தருளினாராம். உலகத்திற்குக் கர்த்தா அரனா அல்லது அரியா என அவர்கள் கேட்ட பொழுது, வியாச முனிவர் விஷ்ணுவென விடையிறுத்தார். அதனைக் காசி க்ஷேத்திரத்தில் விசுவநாதசுவாமி சந்நிதானத்திற் புலப்படுத்த வேண்டுமென்று மற்றையோர் விரும்பியதற்கு இணங்கி, காசிக்குச் சென்று, வலது கரத்தைத் தலைமேற்றூக்கி, “விஷ்ணுவையன்றி வேறு தெய்வங்கட்குப் பரத்துவமில்லை” எனக் கூற, நந்தியெம்பெருமான், “தூக்கிக் காட்டிய கரம் உயர்த்தியவாறே நிற்க” எனச் சபித்தனர். இச்சாபம் நீங்கும் பொருட்டு முன்னேசுவரத்தை வியாசர் அடைந்து சிவபெருமானை வழிபட்டு அவ்விடத்தில் வியாஸேசர் என்னும் திருநாமத்தோடு ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டையும் செய்தார். இச்செய்திகளைத் தக்ஷிண கைலாச புராணங் கூறுகின்றது. மோகினியுருக்கொண்ட மாயவன் வரலாற்றை மாயவனாற்றின் பெயர்க்குக் காரணமாகக் கற்பித்துக் கூறுவர். இது சிங்களத்தில் தெதுறுஓயா என்று அழைக்கப்படும்.

## முன்னேசுவர மான்மியம்

சூர்ய குலோத்துங்க ஸ்ரீவரராமதேவ சோழ மகாராசாவின் குமாரன் குளக்கோட்டு மகாராசன் †சாலிவாகன சகாப்தம் 512 நிகழுங் காலத்தில்

---

*At Munniswaram in the Chilaw District already an ancient (Mun) shrine of Shiva (Isvara) as its name implies, Rama is said to have worshipped on his way to battle with Ravana.—Report on the census of 1901.

†இவ்வரச குமாரன் சாலிவாகன சகாப்தம் 358-ஆம் வருஷத்தில் இலங்கைக்கு யாத்திரையின் பொருட்டு வந்தான் என வைபவமாலை கூறும். “The year of Kulakottan's arrival at Trincomalee falls within the reign of Pandu, who according to the Mahawansa held Anuradhapura from 434 to 439 A.D.” (*Ancient Jaffna*, p. 228) என முதலியார் இராசநாயகம் அவர்கள் குறிப்பிடலால், சகாப்தம் 512 என்பது வலியிழந்து நிற்றல் காண்க. மேலும் இவ்வரசகுமாரனைப்பற்றிய வரலாறு முழுதும் கட்டுக்கதையெனக் கொள்ளும் சரித்திராசிரியர்களுமுளர். தென்னிந்திய வரலாறுகளில் இவ்வரசனைப்பற்றி ஓரிடத்திலும் குறிக்கப்படவில்லையெனினும், யாத்திரையின் பொருட்டு வந்த ஓர் அரச குமாரன் அல்லது சிங்கள அரச குமாரன் எனக் கருதல் பிழையன்று. பண்டைக் காலச் சிங்களவரசர்கள் கதிரகாமதெய்யோ, விஷ்ணுதெய்யோ, பத்தினிதெய்யோ முதலிய

கோணேசர் திருப்பணியை நிறைவேற்றிய பின்னர் முன்னேசுவாஞ் சென்று திருப்பணிகளை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தை நடத்தினர் எனவும், நித்திய நைமித்திகங்கள் சிறப்பாக நடந்துவரும்பொருட்டு, சோழ தேசத்தி லிருந்து பல பணிவிடைக்காரர்களையும் அழைத்துவந்து குடியிருத்தி, நெல் விளை நிலங்களையும் கொடுத்து, மதுரையிலிருந்து தனியுண்ணாப் பூபால னென்பவனை அழைத்துவந்து முன்னேசுவர நகரில் அரசு புரியும்படி முடி சூட்டினர்* எனவும், அதன் பின்னர் இப் பூபாலன் முன்னேசுவர ஆல யத்தைச் சேர்ந்த விளைநிலங்களை 66 கிராமங்களாக்கி முற்கூறிய பணி விடைக்காரரோடு பூசை முதலியவற்றைச் சிறப்பாக நடப்பித்து வந்தா னெனவும் முன்னேசுவர மான்மியம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

## சாஸனம்

இதன் பின்னர் ஜயவர்த்தனக் கோட்டையிலிருந்து அரசாண்ட சூரிய குல திலகரும் மகாபராக்கிரமபாகு எனச் சிறப்பித்து அழைக்கப்பட்டவரு மாய ஆறும் பராக்கிரமவாகு (கி.பி. 1410—1468) இக்கோயிற் பொருள்களை முதலில் அபகரித்தார்; அவருக்கு அதனால் நேர்ந்த நோய் வருத்தக் கண்டு, தாம் முடிசூடிய ஆண்டிலிருந்து 38-ஆவது ஆண்டில் மீட்டும் பொருள்கள் யாவற்றையும் கொடுத்து உதவியதோடு, நித்திய நைமித்திகங் களுக்கு வேண்டிய திரவியங்களை மாதந்தோறும் அரண்மனைக் களஞ்சியத்தி லிருந்து கொடுக்கும்படியும் கட்டளையிட்டு, கி. பி. 1448-ஆம் ஆண்டில் மேற் கூறிய விவரங்களைச் சிலாசாசனம் பண்ணிக்கொடுத்தார். இக்கோயிலில் இன்னும் பல சாசனக் கற்கள் இருத்தலைக் காணலாம். வேறெந்தக் கோயி லிலும் இவ்வளவு நீடிய சிலாசாசனங்களை இலங்கையிற் காண முடியுமோ வென்பது சந்தேகம். கல்வெட்டு வாசகத்தின் பழைய பிரதியொன்றை மிக அண்மையில் பார்க்கும் அரிய சந்தர்ப்பம் முதலியார் இராசநாயகம் அவர்க ளுடைய உதவியாற் கைகூடிற்று. அப்பிரதியில்† ஒரு பாகத்தை ஈண்டுக் காட்ட விரும்புகின்றேன்:—"நன்மை பொருந்திய புத்தருடைய பாத கமலங்களை வந்திக்கப்பட்டவராயும் சூரிய வமிசத்தி லுண்டானவராயும் இராசாதிராசராயும் அன்னிய ராசாக்களுக்கு நாயகராயும் சிறிசங்கபோதி யென்ற நாமதேயத்தை யுடையவராயும் மூவுலகங்களுக்கு மேகச்சக்ராதி பத்தியத்தை யுடையவருமாகிய சிறீபராக்கிரமபாகு விராசாவினுடைய ௩௮-வது ஆண்டு ஐப்பசி பூர்வபக்கம் ௧௦-வது திதி முன்னீசுவரமுடைய

---

தெய்வங்களை வழிபட்டுக் கோயிலமைத்த செய்தி சரித்திர நூல்களில் பாக்கக் காணலாம்.

*கோயில் அதிகாரியாகவும் மேற்பார்வையாளராகவும் நியமனம் பெற் றிருத்தல் கூடும். அரசு புரிந்தமை பொருத்தமில் கூற்றும்.

† Photostat copy of the grant-property of the Ceylon Historical manuscripts commission. இதன்கண் ணுள்ள வாசகத் திற்கும் Royal Asiatic society (C.B.) Journal என்னும் பத்திரிகையில் (Vol. X—No. 35) வெளிவந்த வாசகத்திற்கும் வேற்றுமையுண்டு.

தம்பிரானைப் பூசிக்கப்பட்ட குருக்கள்மாரை ஜயவர்த்தனக் கோட்டைக்கு அழைத்து முன்னீசுவரருடைய தலத்தின் செய்தி கேட்டு முன்பு குருக்கள் மாருக்கு நின்ற முன்னீசுவரத்தினெல்லைக் குட்பட்ட தலத்தைத் தம்பிரானூர்க்குத் திருநாமத்துக் காணியாகவும்......."

## புதையல் !

இனி இலங்கை போர்த்துக்கேயர் ஆளுகைக்கு உட்பட்ட காலத்தில், அவர்கள் பொருள் பெறுவதற்காகப் பல சைவக் கோயில்களைச் சூறையாடி வந்தனர். இதற்குப் பயந்தே குருக்கள்மார் விக்கிரகங்களையும் விலையுயர்ந்த பொன்னாபரணங்களையும் கேணிகளிலும் தாமரைத் தடாகங்களிலும் கிணறுகளிலும் புதைத்துவைக்க நேர்ந்தது. இக்கோயிலின் முன்னர்க் காணப்படும் தடாகத்தில் சில விக்கிரகங்கள் அங்ஙனமிருந்து அத்தடாகத்தைத் திருத்த வெட்டியபொழுது வெளிக்கிளம்பின எனப் பல அறிஞர் அவ்வூரிற் கூறியதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். முற்கூறியவாறு போர்த்துக்கேயரின் சேனையொன்று கி. பி. 1575-ல் சலாபத்தை அடைந்து அதனை அழித்த பின்னர் முன்னேசுவரத்திற்குச் சென்று சூறையாடியது எனவும், அக்கோயிலில் அமைக்கப்பெற்ற லிங்கம்* ஓர் ஆளளவு உயர முள்ளதெனவும், வானத்திலிருந்து தோன்றிற்றென நம்பப்படுகிறதெனவும் போர்த்துக்கேய சரித்திரவாராய்ச்சி யறிஞர் டாக்டர் பவுல் பீரிஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்†. மேலும் யேசு சபைக் குருமார் கி. பி. 1602-ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் கர்த்தருடைய ஊழியத்திற்காக இலங்கைக்கு வந்தபொழுது (de Azavedo) தெ அசவெதோ என்னும் போர்த்துக்கேயத் தலைவர் இவர்களுக்கு ஆதரவளித்து, தமது சொந்தச் செலவில் கொழும்பிலே ஒரு மடம் கட்டிக்

---

* இந்த லிங்கம் இப்பொழுதுள்ள கோயிலின் பிற்பக்கத்திலிருப்பதை இன்றும் காணலாம்.

†Another force sent out with a similar object ravaged the district of Chilaw, after which it made its way to the ancient and revered shrine of Munneswaram, one of the five Isparams or residences of Siva in Ceylon. This temple is said to have been founded by Ramachandra, the avatar of Vishnu himself, after the defeat of Ravana. Its Lingam, the emblem of the God, was a great cylinder of stone of the height of a man and like the Diana of the Ephesians was believed to have fallen from heaven. Numerous inscriptions there bore testimony to the wealth which the devotion of successive kings had dedicated to its service and its separate domain comprised 62 villages to which it gave its name. Much plunder was anticipated and the Portuguse pressed on eagerly. The Sinhalese force which blocked the way was driven back with the loss of its commander and the temple sacked.—*Ceylon and the Portuguese* by Dr. P.E. Pieris, pp. 89-90.

கொடுத்ததுமன்றி முன்னேசுவரக் கோயிலைச் சார்ந்துள்ள விளை நிலங்களை யும் இவர்களுக்காகப் புறம்பு பண்ணிவைத்தார் என்று டாக்டர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.*

## திருப்பணி

பலவாண்டுகட்குப் பின்னர், கண்டியிலிருந்து அரசாண்ட கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மகாராஜா அவர்கள் (கி.பி. 1747—1780) இத்தலம் பழுதுபட்டிருப் பதையறிந்து, சோழ தேசத்திலிருந்து சிற்பாசாரியர்களை வரவழைத்துத் திருப்பணிகளை நிறைவேற்றி, பூசைகள் கிரமமாக நடத்தற்கேற்ற ஏற்பாடு களைச் செய்து, குருக்கள்மாருக்கு 32 அவுண நெல் விளை நிலங்களைச் சகாப் தம் 1675 செல்லா நின்ற ஸ்ரீமுக வருஷம் ஆவணி மாதம் 14-ஆம் தேதி (கி. பி. 1753) தாமிரசாசனம் பண்ணிச் சொந்தமாகக் கொடுத்தார்கள்.

சிலகாலஞ் சென்ற பின்னர், இக்கோயிலை மேற்பார்வை செய்பவர்கள் ஒழுங்கின்மையால் மீட்டும் இக்கோயிற் கட்டடம் பழுதுற்றது. யாழ்ப்பா ணத்துப் பிரம்மஸ்ரீ குமாரசுவாமி குருக்களென்பவரது கோய் வடிவாம்பிகை யின் திருவருளால் நீக்கப்பெற்றமையின் அவருடைய பெருமுயற்சியாலும் சலாபம், கொழும்பு முதலிய ஊர்களிலுள்ள சைவப்பிரபுக்களுடைய முயற்சியாலும் கி. பி. 1875-ஆம் ஆண்டளவில் இக்கோயில் மீட்டும் புதுப்பிக்கப்பட்டதென்பர். அங்ஙனம் பழுதுபார்க்குங் காலத்தில் சாசனம் பொறிக்கப்பட்ட கருங்கற்களை வரிசை மாற்றி வைத்துக் கட்டிவிட்டார்கள். அன்றியும் அவை வெயிலிலும் மழையிலும் கிடந்தமையால் பல எழுத்துக்கள் நன்கு புலப்படாது அழிந்துபோய்விட்டன.


இங்ஙனம் சரித்திர சம்பந்தமான சிலாசாசனங்களையே அழிய விடுகின்ற தமிழர்கள்தம் சரித்திரமே மறைந்துபோயினமை ஒரு வியப் பன்று. சரித்திர சம்பந்தமான பழைய பொருள்களைப் பாதுகாக்கும் வழக்கம் தமிழர்களுக்குச் சிறிதளவேனும் இல்லை. இதுபோலவே யாழ்ப் பாணச் சரித்திர ஏடுகளும் மறைந்தொழிந்தன போலும். தமிழகத்திலும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தோன்றியிராதிருப்பின், சிலப்பதிகாரமேது? மணிமேகலையேது? நிலவில் முல்லை மலர்வதேது? இந்நூல்கள் யாவும் பொய்யாய்ப் பழங்கதைகளாய்ப் போயிருக்குமன்றோ?

## வந்து பாருங்கள் !

முன்னர்க் குறித்த பிரும்மஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள் அவர்களே இக்கோயிற் பூசைகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். தென்னிந்தி யாவிலுங்கூட இவ்வளவு சிறப்பான கிரியைகளைக் காணமுடியாதெனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். நவராத்திரி பூசை நடக்குங் காலங்களில் நீங்கள் ஒருமுறை வந்து பார்த்தாற்றான் நான் கூறுவதன் உண்மையினை உணர்வீர்கள்.

---

*Ibid, p. 168.



# முன்னீசுவரம்

குல. சபாநாதன்

ஒரு தலத்தை அடைவதற்கு அடியார்கள் அநுபவிக்கும் துன்பங்கள் இறைவனைத் திரி கரண சுத்தியுடன் வழிபட அவ் வடியார்களைப் பக்குவப்படுத்தும் வாயில்களாகக் கருதப்பட்டன முற்காலத்தில். ஆனால் இக்காலத்திலோ கோயிற் சந்நிதானத்திற் போய் இறங்கக்கூடிய நவீன வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. எனவே பண்டைக்காலத்தில் யாத்திரை செய்த அடியார் கள் பெற்ற இன்பத்தை இக்காலத்தில் எவ்வித துன்பமுமின்றி விரைவாகச் சென்று திரும்பும் அன்பர்கள் அனுபவிக்கின்றார்களோ என்பது சந்தேகம். கதிர்காமம், சமர் தகூடம், முன்னீசு வரம், திருக்கேதீசுவரம் முதலிய தலங்களுக்குப் பண்டைக் காலத்தில் யாத்திரை செய்தவர்கள் அநேக கஷ்டங்களை அடைந்தார்கள். எனினும் அவற்றை இன் முகத்துடன் இறைவன் நாமத்தை ஓதிய வண்ணம் அநுபவித்து வெற்றி கண்டார்கள். அக் காலத்தில் இலங்கையிற் பரவியிருந்த மலேரியாச் சுரமும் யாத்திரிகர் களைத் தாராளமாகத் தாக்கி வந்தது.

## நண்பரின் அழைப்பு

இருபது வருஷங்களுக்கு முன் என்ற ஞாபகம். சிலாபத்திலுள்ள நண்பர் ஒருவர்

ஞாபகம். சிலாபத்திலுள்ள நண்பர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். 'நவராத்திரி பூசை இங்கே மிகவும் சிறப்பாக நடைபெறு கின்றது. ஒருமுறை வந்து பார்த்தாற்ருன் நான் கூறுவதன் உண்மையினை உணர்வீர்கள். இம்முறை உங்களைக் கட்டாயம் எதிர்பார்க் கின்றேன். நான் இங்கே இருக்கும்பொழுது வந்தால், பல வசதிகளையும் செய்து வைக்க லாம்' என்று அக்கடிதத்திற் குறிப்பிட்டிருந்தார். கோயிலைத் தரிசிக்கவேண்டுமென்ற விருப்பம் நெடுங்காலமாக இருந்ததெனினும், அவ் வூரி லிருந்த காட்டுச் சுரத்தை நினைந்தபோது முன்னிருந்த விருப்பம் பையவே நழுவிவிடுவது வழக்கம். என் நண்பர் சிலாபத்தில் இருக்கும் பொழுது யாத்திரை செய்வது உகந்தது எனக் கருதி நானும் சில நண்பர்களும் கொழும்பி லிருந்து புகையிரத மார்க்கமாகப் புறப்பட் டோம். எங்கள் நண்பர் எங்களை எதிர்பார்த்த வண்ணம் சிலாபம் புகையிரத நிலையத்தில் நின்ருர். அவ்விடத்தில் இறங்கினவுடன், கடற் கரையருகில் மிகவும் அழகுவாய்ந்த அவ ருடைய இல்லத்திற்குக் கூட்டிச் சென்ருர்.

"கோயில் எவ்வளவு தூரத்தில் இருக் கிறது?" என்று நான் கேட்டேன்.

"அவசரப்படுகிறீர்கள் போலிருக்கிறதே. கோயில் இங்கிருந்து இரண்டு மைல் தூரத்தி லுள்ளது. சாயங்காலப் பூசைக்குப் போகலாம்"

என்றார், என் நண்பர். அவ்வாறே ஒழுங்கு செய்துகொண்டு கடற்கரை யோரமாகச் சிறிது தூரம் உலாவச் சென்றோம். சென்ற பொழுது நெய்தல் நில மக்களின் குடிசைகள் தென்பட்டன.

"பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி
மேழகத் தகரொடு சிவல்விளை யாட"

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பல்லாண்டுகட்கு முன் பிடித்த படம் இப்பொழுதும் அழியாதிருப்பது கண்டு மகிழ்ந்தோம். உறைக் கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்த பெண்கள் சிங்களப் பெண்களைப் போலச் சேலைகட்டி யிருந்தார்களெனினும் தமிழ் மொழியிலே அளவளாவுதலைக் கேட்டுப் பெரு வியப்படைந்தோம். இவர்கள் சிறிது காலத்துக்குள் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாகி விடுவார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

## ஒரு வசிகர சக்தி

சாயங்காலமானதும் கோயிலுக்குப் புறப்பட்டோம். கோபுரம் எப்பொழுது தென்படும் என்ற ஆவலுடன் பார்த்தவண்ணமே சென்றோம். தென்னிந்தியக் கோபுரங்களைப் போல இராஜ கோபுரமாவது விமானமாவது காணப்படவில்லை. பாரிய கட்டடங்கள் இல்லா

திருந்தாலும் புராதன கோயில் என்ற தன்மையில் அங்கே ஒரு வசீகர சக்தி தாண்டவமாடுவதை எளிதில் உணர்ந்தோம். ஆவலோடு உள்ளே சென்றோம். உள்ளே சென்றவுடன் வடிவாம்பிகை கொலுவிருக்குங் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு கைகூப்பி வணங்கிக் கண்ணீர் விட்டோம். அத் திருவுருவங் கண்டவர் மனத்தைக் கவர்ந்து ஓர் உள்ளக் களிப்பையும் பக்தியையும் உண்டுபண்ணும் வசீகர சக்தி ததும்பி வழியும் தன்மை வாய்க்கப் பெற்றது. நடராசர் திருவுருவம் பல கோயில்களில் இருப்பினும் சிதம்பரத்திலுள்ள நடராசர் திருவுருவம் தலைசிறந்ததாக அமைந்து விளங்குகின்றது. அதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அவ்வாறே இக்கோயிலிலுள்ள அம்பிகையின் திருவுருவம் தனிப்பட்ட சிறப்புடையதாக அமைந்திருப்பதைச் சிற்பக்கலை வல்லாரும் பாராட்டி யிருக்கின்றனர். இவ்வழகிய திருவுருவத்தைக் கண்ட புலவர் பலர் நெக்கு நெக்குருகிப் பாமாலை சூட்டிச் சென்றுள்ளனர். இவ்வாறு உளமுருகிப் பாமாலை சூட்டிய புலவர் ஒருவரின் ஒரு மலரை மட்டும் உங்கட்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வடிவாம்பிகையின் அழகைச் சொல்லோவியத்தில் தீட்டியுள்ளார் இப் புலவர் :

பூமேவு மளகமுந் திலகமிடு நுதலும்
புனைந்தபொற் குழையி னழகும்
புனிதமுறு நாசிகா பரணமும் புன்னகை
பொலிந்தசெம் பவள வாயுந்
தூமேவு முத்தமணி வச்சிரப் பதக்கமுந்
துலங்குபட் டாடை யுடையுஞ்
சுடர்விடு சிலம்பினொடு தண்டைக ளிசைத்திடுந்
துய்யமல ரடியிணை களும்
மாமேவு மரகதம் போலொளிரு மேனியும்
மகிழபய வரத காமும்
வளருட் பார்வையுங் கொண்டடிய னேனுனது
வடிவினைக் காண வருவாய்
தேமேவு பூவன நெருங்குதெங் கம்பொழி
றிகழ்முனிச் சுரத் தமர்ந்தென்
சித்தமிசை குடிகொண்ட வடிவழகி யம்மையே
சிற்சத்தி யான வுமையே.

நாங்கள் முதன்முதலாகச் சென்றபொழுது பிரம்மஸ்ரீ மு. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களே பூசைகளைச் செய்தார்கள். இவர் பக்தி சிரத்தையுடன் கிரியைகளைச் செய்வதிற் பேர் பெற்றவர். இவருக்குப்பின் இவருடைய இனத்தவர்கள் இக்கோயிலைப் பரிபாலித்து வருகின்றனர். இக்கோயிலிற் சைவர்கள் மட்டுமன்றிப் பௌத்தர்களும் வந்து வணங்குகின்றனர்.

## பெருமைமிக்க திருத்தலம்

முன்னேஸ்வரம், இராமேஸ்வரம், கோணேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் என்னும் பஞ்சேசுவரங்களுள் முன்னர்த் தோன்றிய கோயில் முன்னேஸ்வரம் எனச் சரித்திராசிரியர்கள் கருதுகின்றனர். இக் கோயிலின் பெயர் முன்னேசுவரம், முன் னீசுவரம், முனீசுவரம், முன்னீச்சுரம் எனப் பலவாறாக வழங்கப்படுகின்றது. இப்பொழுது பெயர் தெரிந்துகொள்ள முடியாதிருக்கும் முனிவர் ஒருவர் வழிபட்ட ஈசுவரம் எனப் பொருள் கொள்ளல் அவ்வளவு பிழையன்று.

இத்தலத்தின் பெருமை தக்ஷிண கைலாச புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீராமபிரான் இலங்கைக்கு வந்து இராவண னுடன் யுத்தம் தொடங்க முன்னர் முன்னேஸ் வரத்தில் தொழுது சென்றனர் என சேர் பொன். அருணாசலம் அவர்கள் 1901ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பு நூலிற் குறிப்பிட் டுள்ளார். இராவண சங்காரஞ் செய்தபின்னர் இராமபிரான் சீதாதேவியோடு திரும்பிச் செல் லும்பொழுது பிரம்மஹத்தியானது அவரைப் பின் தொடர்ந்ததென்றும், முன்னேஸ்வர க்ஷேத்திரத்தை யடைந்தபொழுது அது தம்மை விட்டு நீங்கியதால் அவர் அக்கோயிலிலுள்ள முன்னநாதேசுவரரையும் வடிவாம்பிகையையும்

தொழுதார் என்றும் தக்ஷிண கைலாச புராணம் கூறுகின்றது.

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்து கோணேசர் ஆலயத் திருப்பணியை நிறைவேற்றிய குளக்கோட்டு மகாராசன் முனீஸ்வரத்திற்கும் சென்று, திருப்பணிகளை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தை நடத்தினுர் என்றும், நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடந்துவரும் பொருட்டு நெல் விளைநிலங்களைக் கொடுத்துத் தனியுண்ணைப் பூபாலன் என்பவனை மேலதிகாரியாக நியமித்தார் என்றும் முன்னேஸ்வர மான்மியம் எனும் நூல் கூறுகின்றது. இதன்பின்னர் ஜயவர்த்தனக் கோட்டையிலிருந்து அரசாண்ட சூரியகுல திலகரும் மகா பராக்கிரமபாகு எனச் சிறப்பித்து அழைக்கப் பட்டவருமாய ஆரும் பராக்கிரமபாகு (கி. பி. 1410 — 1468) இக்கோயிற் பொருள்களை முதலில் அபகரித்தார். அவருக்கு அதனுல் நேர்ந்த நோய் வருத்தக் கண்டு, தாம் முடி சூடிய ஆண்டிலிருந்து 38ஆவது ஆண்டில் மீட்டும் பொருள்கள் யாவற்றையும் கொடுத்து உதவியதோடு, நித்திய நைமித்தியங்களுக்கு வேண்டிய திரவியங்களை மாதந்தோறும் அரண்மனைக் களஞ்சியத்திலிருந்து கொடுக்கும் படியும் கட்டளையிட்டு கி. பி. 1448 ஆம் ஆண்டில் மேற்கூறிய விபரங்களைச் சிலாசனம் பண்ணிக் கொடுத்தார். இக்கோயிலில் இன்

பட்டவருமாய ஆறும் பராக்கிரமபாகு (கி. பி. 1410 — 1468) இக்கோயிற் பொருள்களை முதலில் அபகரித்தார். அவருக்கு அதனால் நேர்ந்த நோய் வருத்தக் கண்டு, தாம் முடி சூடிய ஆண்டிலிருந்து 38ஆவது ஆண்டில் மீட்டும் பொருள்கள் யாவற்றையும் கொடுத்து உதவியதோடு, நித்திய நைமித்தியங்களுக்கு வேண்டிய திரவியங்களை மாதந்தோறும் அரண்மனைக் களஞ்சியத்திலிருந்து கொடுக்கும் படியும் கட்டளையிட்டு கி. பி. 1448 ஆம் ஆண்டில் மேற்கூறிய விபரங்களைச் சிலாசனம் பண்ணிக் கொடுத்தார். இக்கோயிலில் இன்னும் பல சாசனக் கற்கள் இருத்தலைக் காணலாம். இலங்கையில் வேறெந்தக் கோயிலிலும் இவ்வளவு நீடிய சிலாசாசனங்களைக் காண முடியாது.

## போர்த்துக்கேயர் காலத்தில்

இனி, இலங்கை போர்த்துக்கேயர் ஆளுகைக் குட்பட்டிருந்த காலத்தில் அவர்கள் பொருள் பெறுவதற்காகப் பல சைவக்கோயில் களைச் சூறையாடி வந்தனர். இதற்குப் பயந்தே கோயிற் குருக்கள்மார், விக்கிரகங்களையும், விலையுயர்ந்த பொன்னாபரணங்களையும் கேணி களிலும், தாமரைத் தடாகங்களிலும், கிணறு களிலும் புதைத்து வைக்க நேர்ந்தது. இக் கோயிலுக்கு முன்னர்க் காணப்படும் தடாகத்தி லிருந்து சில விக்கிரகங்கள் அவ்வாறு வெளிக்

கிளம்பின. போர்த்துக்கேயரின் சேனை யொன்று கி. பி. 1575ல் சிலாபத்தை அடைந்து அதனை அழித்த பின்னர் முன்னேசுவரத்திற்குச் சென்று சூறையாடினது எனவும், அக் கோயிலில் அமைக்கப்பெற்ற லிங்கம் ஓர் ஆளளவு உயரம் உள்ள தெனவும், அது வானத்திலிருந்து தோன்றிற்றென நம்பப்படுகிற தெனவும் போர்த்துக்கேய சரித்திர ஆராய்ச்சி அறிஞர் டாக்டர் பவுல் பீரிஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்தக் கோயிலுக்கு இலங்கை அரசர்கள் பரம்பரை பரம்பரையாக இறையிலி நிலங்களை வழங்கி, செல்வம் நிறைந்த கோயிலாகத் திகழச் செய்தனர் என்பதற்கு இங்குள்ள சாசனங்களே சான்று பகரும் என மேற்கூறிய அறிஞர் குறிப்பிட்டுள்ளார். பழைய லிங்கம் கோயிலின் பின்புறத்தில் இப்பொழுதும் காணப்படுகின்றது.

பலவாண்டுகட்குப் பின்னர் கண்டியிலிருந்தரசாண்ட கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மகாராஜா அவர்கள் (கி. பி. 1747 — 1780) இத்தலம் பழுதுற்றுக் கிடப்பதை யறிந்து, சோழ தேசத்திலிருந்து சிற்பாசாரியர்களை வரவழைத்துத் திருப்பணிகளை நிறைவேற்றி, பூசைகள் கிரமமாக நடத்தற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்து, குருக்கள்மாருக்கு 32 அவுண நெல் விளை நிலங்களைச் சகாப்தம் 1675 செல்லாநின்ற ஸ்ரீமுக வருஷம் ஆவணி மாதம் 14ஆம் திகதி

(கி. பி. 1753) தாமிர சாசனம் பண்ணிச் சொந்தமாகக் கொடுத்தார்கள். சில காலஞ் சென்ற பின்னர் இக் கோயிலை மேற்பார்வை செய்தவர்கள் ஒழுங்கின்மையால், மீட்டும் இக் கோயிற் பரிபாலனம் சீர்கெட்டது; பூசைகளும் நிறுத்தப்பட்டன. யாழ்ப்பாணத்துப் பிரம்மஸ்ரீ நா. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்கு ஏற்பட்ட நோய் வடிவாம்பிகையின் திருவருளால் நீங்கப் பெற்றமையின், அவருடைய பெரு முயற்சியாலும், சிலாபம், கொழும்பு முதலிய ஊர்களிலுள்ள சைவப் பிரபுக்களுடைய முயற்சி யாலும் கி. பி. 1875ஆம் ஆண்டளவில் இப் பொழுதுள்ள கோயில் மீண்டும் புனருத்தார ணம் செய்யப்பட்டது. அங்ஙனம் புதுப்பித்துக் கட்டுங் காலத்தில் சாசனம் பொறிக்கப்பெற்ற கருங்கற்களை அடிதலை மாறி வைத்துக் கட்டி விட்டார்கள். அன்றியும் அவை வெய்யிலிலும் மழையிலும் கிடந்தமையால் பல எழுத்துக்கள் நன்கு புலப்படாது அழிந்துபோய்விட்டன. இந்தச் சாசனங்களைப் படியெடுத்துக் கோயிலின் வரலாற்றை அறிந்துகொள்ள உதவிபுரிதல் புராதன பொருளாராய்ச்சிப் பகுதியின் கடமை யாகும். ஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் புதல் வர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் இக் கோயிற் பூசகராயிருந்த காலத்தில் இக்கோயிலின் சிறப்பு இலங்கை முழுவதும் பரவலாயிற்று. ஆண்டு தோறும் உற்சவம் திருவிழாக்கள் சிறப்பாக இப் பொழுது நடைபெற்று வருகின்றன. இலங்கை

யின் பல கோடிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்தியுடன்வந்து வழிபட்டுச் செல்கின்றனர். கோயிற் பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றன.

## புலவர்களின் பாமாலைகள்


முன்னைநாத சுவாமியையும் வடிவழகியம்மையையும் காலத்துக்குக் காலம் வழிபட்டுச் சென்ற புலவர்கள் அநேக பாமாலைகளைச் சூட்டியிருக்கின்றனர். ஆனால் அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட இதுவரை எவரும் முன்வரவில்லை. இது ஒரு பெருங் குறையென்றே சொல்லலாம். காரைநகர் ஸ்ரீமத் கா. சிவசிதம்பர ஐயரவர்கள் முனீசுரர் நவமணி மாலையினை (1887) இயற்றியுள்ளார். கொழும்பு மு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள் முனியேசுர தீர்த்த யாத்திரை வழிநடைப் பதம் எனும் நூலினை (1897) இயற்றியுள்ளார். கொக்குவிற் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் முன்னை நாதசுவாமி பேரிலும் வடிவழகியம்மைபேரிலும் ஆசிரிய விருத்தங்கள் இயற்றியுள்ளார். கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளையவர்கள் (1) முனீசுரத்து வடிவழகியம்மை ஆசிரிய விருத்தமும் பதிற்றந்தாதியும் (2)முனீஸ்வர ரூஞ்சல் எனும் நூல்களை இயற்றியுள்ளார். கொழும்பு அ. வயித்திலிங்கம் அவர்கள் முனீசுரவந்தாதி பாடியுள்ளார். புழுதிவயல் எஸ். ஆர். தம்பு அவர்கள்


முனீஸ்வர வடிவழகி பதிகம் இயற்றியுள்ளார். இன்னும் பல நூல்களுள.

உலகில் உற்பவித்த மக்கள் யாவரும் இறைவனின் பிள்ளைகள் என்பதற்கும், இறைவனின் சந்நிதானத்தில் சாதி, சாகிய, மத பேதங் கடந்து நின்று மக்கள் யாவரும் வழிபடலாம் என்பதற்கும் வடிவழகியின் சந்நிதானம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ஒரு முறை அந்தப் புனித தலத்தைத் தரிசித்தால், ஆண்டு தோறும் அல்லது அடிக்கடி தன்னகத்தே இழுக்கும் காந்த சக்தி வாய்ந்தது. நீங்கள் ஒருமுறை போய்ப் பாருங்கள்.

போற்று முனீசன்றன் பொன்னடியை நெஞ்சேநீ
மாற்றும் பிறவி மயல்.

— முனீசுரர் நவமணிமாலை





MATHI COLOURS
Nallur 021 2229285